**இலங்கை வங்கி - 2019**

------------------------------------------

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை வங்கியினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் ("தொகுதி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆந் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களினை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கருவிகளின் நட்டக்கழிவு தொடர்பான மேலதிக வழிகாட்டல் தொடர்பில் இலங்கை மத்திய | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது. இவை தொடர்பாக வரைவு எஸ்எல்எவ்ஆர்எஸ் 09 | ஒழுங்குமுறை வழிகாட்டல்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் |

வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் (பின்னிணைப்பு I) பிரகாரம் வங்கி தற்போதுள்ள நட்டக்கழிவு செயன்முறையை மேலும் நவீனமயப்படுத்த வேண்டியுள்ளதென்பது குறித்துக் கொள்ளப்பட்டது.

- சீபீஎஸ்எல் வழிகாட்டல்களின் பிரகாரம், பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதன் மூலம் உயர்ந்த கட்டத்திலிருந்து குறைந்த கட்டத்திற்கு (உதாரணம்: கட்டம் 3 இலிருந்து கட்டம் 2 இற்கு) கடன் வசதிகள் தரமுயர்த்தப்பட முடியும்.
  - கடன் வசதிகளை தரமுயர்த்துதல் இடர் முகாமைத்துவ பிரிவு மாத்திரம் மேற்கொள்ளப்படும் அத்துடன் கடன் மீளாய்வு பொறிமுறையிலிருந்து சுதந்திரமாக இருக்கும்.
  - அத்தகைய தரமுயர்த்தல் பீஓடி அங்கீகரித்த கொள்கை, காரண விளக்கம் மற்றும் போதுமான ஆவணப்படுத்தலுடன் ஆதரிக்கப்படும்.
  - மறுசீரமைக்கப்பட்ட வசதிகளை தரமுயர்த்தும் போது 1 ஆவது மூலதனம் மற்றும்/ அல்லது வட்டி தவணை பிந்திய மறுசீரமைப்பு திகதிக்கு பின்னர் ஆகக் குறைந்தது 90 நாட்களிற்கு திருப்திகரமான செயலாற்றல் காலப்பகுதி கருதப்பட வேண்டும். மறுசீரமைக்கப்பட்ட வசதிகளை தரமுயர்த்துவது தொடர்பாக உரிமம் பெற்ற வங்கிகள் கடன்கள் மற்றும் முற்பண வகைப்படுத்தல், செயன்முறைக் கையேட்டில் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட சபை இவ் ஆண்டின் இறுதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும்.

எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அளவிடுதல் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தயாரித்தல் அவசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தை இனங்காணுதல் மற்றும் ஏற்பாடு செய்தல் தொடர்பாக 2008 இன் 3/4 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்ட பணிப்புரைகளுடன் இணங்குதல் வேண்டும்.<br><br>• எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களை மதிப்பிடுவதற்கு அல்லது அளவிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட மாதிரிகளை சரிபார்ப்பதற்கு வங்கியானது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கொண்டிருக்க வேண்டும். | | |
| (ii) | ஜீஎல் (எஸ்எல்எவ்ஆர்எஸ் சீராக்கங்கள்) உடன் சீராக்கம் செய்யாமல் நிதிக்கூற்றுக்களிற்கு நேரடியாக தொடர்ச்சியாக பதிவுசெய்யப்பட்ட சில பதிவுகள் காணப்பட்டன. அத்தகைய தகவல்கள் spreadsheets இல் பேணப்படுகின்றன. இது தரவு இழப்பு அல்லது கையாளுதலிற்கு வழிவகுக்கும்.<br><br>ஆகையால் வங்கியானது அத்தகைய தரவுப் பதிவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வலுவான செயன்முறையின் தேவைப்பாட்டை வங்கி மதிப்பீடு செய்ய வேண்டும். | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது.<br><br>தற்போது நடைபெற்று வருகின்ற அமுல்ப்படுத்தல் செயற்திட்டங்களின் நிதி அறிக்கையிடலிற்கான முறைமை தீர்வை அமுல்ப்படுத்துவதன் மூலம் இது தீர்க்கப்படும். | தரவுப் பாதுகாப்பு மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நிதி அறிக்கையிடலிற்கான முறைமைத் தீர்விற்கு வங்கி செல்ல வேண்டும். |
| (iii) | “கட்டம் 3” கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் காலநீடிப்பு, கொடுப்பனவை பிற்போடுதல், விட்டுவிடுதல் உடன்பாடு (மீளப்பட்டியலிடப்பட்டதும் மறுசீரமைக்கப்பட்டதும்) உள்ளடங்கிய சலுகைகளின் விளைவாக விதிமுறைகளை மாற்றியமைத்தல் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் முக்கிய வங்கி முறைமையில் மறுசீரமைக்கப்பட்ட வசதிகளை | மறுசீரமைக்கப்பட்ட வசதிகளை கவர்ந்துகொள்வதற்கு முக்கிய வங்கி முறைமைக்கான மாற்றியமைத்தல் முன்னேற்றகரமாக உள்ளது. யூஏரீ செயன்முன்னேற்றத்தில் உள்ளதுடன் 2020 திசெம்பர் 31 இற்கு முன்னர் அமுல்ப்படுத்தலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | மறுசீரமைக்கப்பட்ட கடன் வசதிகளை இனங்காண்பதற்கு முக்கிய வங்கி முறைமைக்காக மேற்கொள்ளப்படுகின்ற மாற்றியமைத்தல் செயன்முறையை விரைவுபடுத்துதல் மற்றும் குறித்த கடன்கள் மறுசீரமைக்கப்பட்டிருந்த தடவைகளின் எண்ணிக்கை. |

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | கவர்ந்துகொள்வதற்கு வங்கிக்கு எந்தவொரு பொறிமுறையும் காணப்படவில்லை. ஆகையால் வங்கியின் நட்டக்கழிவு ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது அத்தகைய மறுசீரமைக்கப்பட்ட வசதிகளிற்கு எந்தவொரு முறையும் காணப்படவில்லை. | | |

## 1.5.2 தொங்கல் கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை, கண்டி மற்றும் கஹதகஸ்திகிலிய கிளைகளில் முறையே ரூபா 34,974,551, ரூபா 5,266,076 மற்றும் ரூபா 3,960,000 தொகையான நீண்டகால நிலுவை தொங்கல் கணக்கு கடன்பட்டோர் மீதிகள் அவதானிக்கப்பட்டன. அம் மீதிகள் 03 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக அதே கணக்கில் காணப்பட்டன. கஹதகஸ்திகிலிய கிளையின் நீண்ட கால நிலுவை மீதியை தீர்வு செய்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதுடன் கண்டி கிளையின் சீர்செய்தல் செயன்முறை செயன்முன்னேற்றத்தின் கீழ் உள்ளது. எனினும் பதுளை கிளையின் நீண்டகால நிலுவை மீதிகள் நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | <u>தொங்கல் கணக்கு கடன்பட்டோர்</u> கஹதகஸ்திகிலிய கிளை – சீர்செய்யப்பட்டுள்ளது பதுளை கிளை – நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கண்டி கிளை – சீர்செய்தல் செயன்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | நீண்டகால நிலுவை மீதிகளை தீர்வுசெய்வதற்கு தொங்கல் கணக்கு கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை கண்காணிப்பதற்கு முறையான பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஏனைய பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சில ஜீஎல் கணக்குகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகால நிலுவை மீதிகளை | உரிய கிளைகளால் 2020 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் 07 கணக்குகள் தொடர்பான மீதிகளை பதிவழிப்பதற்கு | நீண்டகால நிலுவை மீதிகளை கண்காணித்து பேணுவதை தவிர்ப்பதற்கு முறையான |

| | | |
|---|---|---|
| கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. ரூபா 637,829,357 கூட்டுமொத்தமான 19 பொதுப் பேரேட்டுக் கணக்குகளின் மீதிகள் 2019 திசெம்பர் 31 மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதே மீதியை காட்டுகின்றமை மேலதிக சான்றாக காணப்பட்டது. | ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.<br><br>உரிய பிரிவுகளின் ஒருங்கிணைப்புடன் ஜீஎல் இலக்கம் 22310044 இலுள்ள நிலுவை மீதிகளை ஒன்றாக தீர்வு செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.<br><br>அனைத்திற்கும் தொடர்புடைய ஏனைய கிரய நிலையங்களிற்கு இவ் விடயத்தை சீர்செய்வதற்கு 2020 செப்தெம்பர் 04 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

**1.6.2 முற்பணங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 20 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் மொத்த நிலுவை தொகை ரூபா 22,339.46 மில்லியனாக இருந்ததுடன் இது அத் திகதியிலுள்ளவாறான வங்கியின் மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களில் 28 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | இணங்கப்பட்டுள்ளது. | வாடிக்கையாளர்களிடமிருந்து மொத்தமாக பெறவேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு வங்கியால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல். |

| இல. | வாடிக்கையாளரின் பெயர் | மொத்த நிலுவை தொகை (ரூபா.’ மில்லியன்) |
|---|---|---|
| 1. | கே டி இபேர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட் | 2,636 |
| 2. | ஜயவிக்ரம றைஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 2,108 |
| 3. | தொழியதூ இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,446 |
| 4. | என்பீ பூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,253 |
| 5. | அனுதன் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட் | 1,206 |
| 6. | லிங்க் என்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | 1,193 |
| 7. | றுகுணு டெவலெப்மென்ட் கென்ரக்ரேர்ஸ் | 1,183 |
| 8. | ஆர் என் கென்ஸ்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,144 |

| | | |
|---|---|---|
| 9. | கடுவெல ஹோல்டிங்ஸ் | 1,106 |
| 10. | ஆர்டிஎம்டி ரெக்ஸ்ரைல் (பிறைவேட்) லிமிட்டட் | 1,034 |
| 11. | தோரெஸ் றீட்ரீற் (பிறைவேட்) லிமிட்டட் | 947 |
| 12. | கஸ்ரவே மல்டிவ்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 934 |
| 13. | தேசிக எம்பிறொய்டரீ சொலுசன் (பிறைவேட்) லிமிட்டட் | 944.65 |
| 14. | சீஎம்எல்-எம்ரீடி கென்ஸ்ரக்ஷன்ஸ் லிமிட்டட் | 866 |
| 15. | சன்பே ஜீன்ஸ் கோப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டட் | 741 |
| 16. | கன்டியன் ஆட்ஸ் சுப்பர் கெம்பிலெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 724.75 |
| 17. | இசுறு என்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | 686 |
| 18. | கமல் கேபிள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 677 |
| 19. | மேனகா றைஸ் பிறடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 863.06 |
| 20. | நவலோகா ஸ்ரீல் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 647 |
| | **மொத்தம்** | **22,339.46** |

(ii) 2019 ஆம் ஆண்டில் கடன்கள் வழங்கப்பட்ட வாடிக்கையாளர்களின் பட்டியல் காணப்படுகின்றதுடன் அக் கடன்கள் அதே ஆண்டில் என்பிஎல் வகைப்படுத்தலிற்கு மாற்றப்பட்டுள்ளன. மேற்படி பட்டியலில் முதல் 10 வாடிக்கையாளர்களை பின்வரும் வாடிக்கையாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

| **இல.** | **கடன் பெறுபவரின் பெயர்** | **2019.12.31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை தொகை (ரூபா. மில்லியன்)** |
|---|---|---|
| 1 | மேனகே றைஸ் பிறடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 850 |
| 2 | என் அன்ட் ஏ எஞ்சினியரிங் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 630 |
| 3 | ஜயவிக்ரம றைஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 600 |
| 4 | பிற்ஸ் ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டட் | 246 |
| 5 | தயா அப்பரெல் எக்ஸ்போட் (பிறைவேட்) லிமிட்டட் | 172.62 |

<u>மேனகே றைஸ் பிறடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>

வாடிக்கையாளர் இணங்கியிருந்ததுடன் முதலாவது மற்றும் இரண்டாவது ஆண்டுகளில் ஒவ்வொன்றும் முறையே ரூபா 2.5 மில்லியன் மற்றும் ரூபா 3.5 மில்லியன் மாதாந்த கொடுப்பனவுகளின் போது வசதி சேவையளிப்பதற்கு கடன் குழு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

<u>என் அன்ட் ஏ எஞ்சினியரிங் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>

2018 ஆகஸ்ட் 29 இல் மூன்று கடன்கள் வழங்கப்பட்டு 2019 பெப்ரவரி 28 இல் செயற்பாடற்ற பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தது. இக் கடன்கள் 2019 யூன் 27

குறித்த வாடிக்கையாளரிற்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் வங்கியால் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல்.

| | | | |
|---|---|---|---|
| 6 | ஒலிம்பஸ் கென்ஸ்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 156 | இல் மீளப்பட்டியலிடப்பட்டு வங்கியின் தற்போதுள்ள கடன் கொள்கையின் கீழ் என்பிஎல் ஆக வகைப்படுத்தப்பட்டிருந்தது.<br><br><u>ஜயவிக்ரம றைஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u><br>ரீஆர் வசதியின் மொத்த மீதியை விடுவித்த பின்னர் வாடிக்கையாளர் கணக்கிற்கு காசுப்பாய்ச்சலை அனுப்புதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக ரீஆர் வசதி மற்றும் அனைத்து காலக் கடன்கள் என்பன என்பிஎல் வகைப்படுத்தலிற்கு மாற்றப்பட்டிருந்தன.<br><br><u>ஒலிம்பஸ் கென்ஸ்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u><br>இணங்கப்பட்ட காசுப்பாய்ச்சல் வங்கி ஊடாக அனுப்பப்படாதிருந்ததுடன் வசதிகள் செயற்பாடற்ற வகைப்படுத்தலிற்கு மாற்றப்பட்டுள்ளது.<br><br><u>கே டி இபேர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட் (கேடிஈஎஸ்எச்)</u><br><br>இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2018 யூலை மாதத்தில் என்பிஏ ஆக கேடிஈஎஸ்எச் இற்கு வழங்கப்பட்ட அனைத்து வசதிகளையும் வங்கி வகைப்படுத்தியிருந்தது. ஆகையால் 2018 யூலையின் பின்னர் கம்பனிக்கு வழங்கப்பட்ட எந்தவொரு வசதியும் ஆரம்ப மானியத்துடன் என்பிஏ பிரிவிற்கு தானாகவே மாற்றப்பட்டிருந்தது. |
| 7 | கே டி இபேர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட் | 125 | |
| 8 | சன்றைஸ் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 101 | |
| 9 | கொமுதி எஞ்சினியரிங் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 96 | |
| 10 | றுகுணு டெவ: கென்ரக்ரேர்ஸ் & எஞ்சி: (பிறைவேட்) லிமிட்டட் | 95 | |
| | **மொத்தம்** | **3,071.62** | |

என்பிஏ ஆக அனைத்து வசதிகளையும் வகைப்படுத்திய பின்னர் வங்கியானது மூன்று பிரதான செயற்திட்டங்களிற்காக ரூபா 416.31 மில்லியன் (2019.12.31 இல் உள்ளவாறான ஓ/எஸ் - ரூபா 124.86 மில்லியன்) தொகையான 14 புதிய வசதிகளை 2019 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு வழங்கியிருந்தது. குறித்த செயற்திட்டங்களிலிருந்து வங்கி காசுப்பாய்ச்சலை பெறுகின்றதுடன் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆர்டிஏ மற்றும் என்டபிள்யூஎஸ்டிபீ இன் அங்கீகாரத்துடன் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு அவர்களிற்கு கொடுப்பனவுகள் விடுவிக்கப்படுகின்றன. ஆகையால் வங்கியின் மறைமுகமான வெளிப்படுத்துகை (பிணைக் கடிதம்) குறைக்கப்படும். மேலும் வங்கி வசதிகளின் பகுதி காசுப்பாய்ச்சலிலிருந்து அறவிடப்படுகின்றது. (அத் திகதியிலுள்ளவாறான 14 கடன் வசதிகளின் ஓ/எஸ்: ரூபா 51.5 மில்லியனாகும்).

<u>கொமுதி எஞ்சினியரிங் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>

விலைச்சிட்டை கழிவிடுதல் வசதிகளின் கீழ் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 300 மில்லியன் உப கடன்கள் என்பிஏ பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவ் விலைச்சிட்டைகளிற்கு உரிய கொடுப்பனவுகள் இன்னமும் பெறப்பட்டிருக்கவில்லை.

ருகுணு டெவ: கென்ரக்ரேர்ஸ் & எஞ்சி: (பிறைவேட்) லிமிட்டட் விலைச்சிட்டை கழிவிடுதல் வசதிகளின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 95.0 மில்லியன் உப கடன்கள் என்பிஏ பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தன. அவ் விலைச்சிட்டைகளிற்கு உரிய கொடுப்பனவுகள் இன்னமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுவெல ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் பணிப்பாளர்களிடமிருந்தான மொத்த நிலுவை மீதி ரூபா 1,120.509 மில்லியன் தொகையானதுடன் கடன்கள் 2017 யூன் 23 இல் செயற்பாடற்ற வகைப்படுத்தலிற்கு மாற்றப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **வசதி இல.** | **வசதி தொகை (ரூபா.' மில்லியன்)** | **வழங்கப்பட்ட திகதி** | **2019.12.31 இல் உள்ளவாறான நிலுவை (ரூபா.' மில்லியன்)** |
|---|---|---|---|
| **கடுவெல ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - மெற்றோபொலிற்றன் கிளை** | | | |
| சீ/ஏ 78332257 | பிஓடி 70.0 | 2016.07.25 | 134.092 |
| எல்என் 80186447 | எஸ்ரீஎல் 100.0 | 2016.12.16 | 95.301 |
| எல்என் 80118030 | 1.346 | 2016.11.29 | 1.346 |
| எல்என் 80119165 | 0.669 | 2016.11.29 | .669 |
| நாணயக் கடிதம் | 400 | 2016.07.07 | 426.579 |
| அடமானக் கடன்கள் | 450 | 2016.07.07 | 447.985 |
| உப மொத்தம் | | | **1,105.972** |
| **கடுவெல கிளை – டி சீ ஜே கடுகம்போல** | | | |
| சீ/ஏ 71241036 | ரீஓடி | 2017.03.13 | 10.470 |
| 608002015 00879800 | குத்தகை | 2015.09.09 | 4.067 |
| உப மொத்தம் | | | **14.537** |
| மொத்தம் | | | **1,120.509** |

வங்கியின் மெற்றோபொலிற்றன் கிளை மற்றும் கடுவெல கிளை என்பவற்றால் கடுவெல ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் பணிப்பாளர்களிற்கு வழங்கப்பட்ட கடன்களிற்கு எதிராக 2018 செப்தெம்பர் 04 இல்

வர்த்தக உயர் நீதிமன்றத்தில் கடன்பெறுநர் மற்றும் பிணைதாரர்களிற்கு எதிராக கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கல் செயன்முறையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல்.

தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றால் தடயவியல் கணக்காய்வு பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அப் பரீட்சிப்பானது ஒவ்வொரு கிளையினதும் பின்வரும் பலவீனங்களை வெளிப்படுத்தியிருந்தது.

<u>மெற்ரோபொலிற்றன் கிளை</u>

- வசதிகளை வழங்குதல் மற்றும் கம்பனியால் பெறுகைகளை பயன்படுத்துவதை கண்காணித்தல் என்பவற்றின் போது மெற்ரோபொலிற்றன் கிளை அதிகாரிகளால் முறையற்றவாறு கடமைகள் ஆற்றப்படுதல்.
- உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட அதிகார எல்லைகளை தவறாக பயன்படுத்துதல்.
- அங்கீகரிக்கப்படாத மிகைகளை வழங்குதல்.
- வங்கியின் சொந்த நிதிகள் ஊடாக வசதியை தீர்ப்பனவு செய்தல்.
- நாணயக் கடிதம் மற்றும் அடமானக் கடன்கள் தொடர்பாக நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட திருப்தியற்ற நடவடிக்கைகள்.

<u>கடுவெல கிளை</u>

- உரிய அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்படாமை.
- வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத ரீஓடி அறவீடு செய்யப்படாமை.
- உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட அதிகார எல்லைகளை தவறாக பயன்படுத்துதல்.
- அங்கீகரிக்கப்படாத மிகைகளை வழங்குதல்.

| | | | |
|---|---|---|---|
| (iv) | கே டி இபேட் & சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட்டின் கடன் நிலுவை மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 7,730.592 மில்லியனாக காணப்பட்டது. கே டி இபேட் & சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளிற்கு எதிராக 2018 நவம்பரில் தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றால் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் கணக்காய்வு வங்கி மூலமான அதிக நிதியளிப்பின் தெளிவான வழக்கை வெளிப்படுத்தியிருந்தது. வங்கி குறித்த சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வழங்கியிருந்ததுடன் அவை வாடிக்கையாளரால் எதிர்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வங்கியானது வசதிகளை மறுசீரமைத்திருந்த போதிலும் வாடிக்கையாளர் அந் நிபந்தனைகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த தவறியிருந்தது. வசதிகளின் விபரங்கள் கீழே அட்டவணையில் பொழிப்பாக்கப்பட்டுள்ளன. | காலத்திற்கு காலம் வங்கியால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்ற வேண்டிய அவசியத்தை வங்கி கம்பனிக்கு அறிவித்திருந்ததுடன் கம்பனி அவற்றை எதிர்கொள்ள முடியாதிருந்தது. எனினும் வசதிகளை நெருக்கமாக கண்காணிக்கும் நோக்கத்துடன் கடன் கோவைகள் 2020 செப்தெம்பரில் வணிக மறுமலர்ச்சி பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தது. | வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கல் செயன்முறையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| வசதி வகை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி (ரூபா.' மில்லியன்) |
|---|---|
| கடன்கள் | 2,070.106 |
| மேலதிகப்பற்று வசதிகள் | 172.568 |
| குத்தகை வசதிகள் | .832 |
| பிணை கோரல் கடிதம் | 392.307 |
| நேரடி வெளிப்படுத்துகை | 2,635.813 |
| பிணைக் கடிதங்கள் | 5,094.779 |
| மொத்த வெளிப்படுத்துகை | **7,730.592** |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **13/2018 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் 11.9 ஆம் பிரிவு** | பொறி, இயந்திரம் மற்றும் உபகரணங்களினை ஈடுவைத்தல் வெளிப்புற மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து அத்தகைய மதிப்பீடு காணப்படாத போது 20% பெறுமானத்தேய்வு வீதத்தை பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்ற தேறிய புத்தக பெறுமதி ஈடுவைக்கப்பட்ட பெறுமதியாக எடுக்கப்பட வேண்டும். மானுக் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிட்ட்டின் இயந்திரங்கள் 2016 திசெம்பர் 07 இல் வழங்கப்பட்ட ரூபா 327,000,000 பெறுமதியான கடன்களிற்கு எதிராக ஈடுவைக்கப்பட்டதால் தேயிலை தொழிற்சாலையுடன் சேர்த்து எடுக்கப்பட்டிருந்த போதிலும் 03 தவிர்ந்த அனைத்து இயந்திரங்களும் முழுமையாக பெறுமானத்தேய்வு இடப்பட்டிருந்ததுடன் தேறிய புத்தக பெறுமதியை பூச்சியமாக காட்டுகின்றன. | சீர்செய்யப்பட்டுள்ளது. வங்கி குழு மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டை வங்கி கருத்தில் கொண்டிருந்ததுடன் புதிய மதிப்பீடு 2018 செப்தெம்பர் 16 இல் கோரப்பட்டிருந்தது. வங்கியால் வழங்கப்பட்ட வசதிகளை பாதுகாக்க தற்போதைய மதிப்பீடு போதுமானதாக உள்ளது. | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| **90/99 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கை** | கிளையின் தற்காலிக மேலதிகப்பற்று வசதிகளை கிளை நெருக்கமாக கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 1,091 மில்லியன் தொகையான மொத்த ரீஓடி வசதிகள் போதியளவு அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகைப்படுத்தலிற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பின்வரும் முதல் 10 வாடிக்கையாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். | <u>என் எஸ் அமரசேகர</u> கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ள அதேநேரம் வாடிக்கையாளரிற்கும் பொது திறைசேரிக்கும் இடையே தீர்ப்பனவு ஒன்று காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. | தற்காலிக மேலதிகப்பற்று வசதிகளை செயற்பாடற்ற வகைப்படுத்தலிற்கு மாற்றுவதை தடுக்கும் பொருட்டு அவற்றை நெருக்கமாக கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| இல. | வாடிக்கையாளர் | ரீஓடி வசதி (ரூபா.' மில்லியன்) |
|---|---|---|
| 1 | என் எஸ் அமரசேகர | 225 |
| 2 | குணதிலக கென்ஸ்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 187 |
| 3 | ஆர்டிஎம்டி ரெக்ஸ்ரைல் (பிறைவேட்) லிமிட்டட் | 108 |
| 4 | வோக்கர் சன்ஸ் & கம். எஞ்சினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 104 |
| 5 | சீ ஜே குறூஸ் | 99 |
| 6 | எஸ் எஸ் குறூஸ் | 99 |
| 7 | எல் எச் பியசேன & கம். (பிறைவேட்) லிமிட்டட் | 76 |
| 8 | சண் டிரவ & ரூர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 67 |
| 9 | எம் எஸ் கடுவெல ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 64 |
| 10 | எம் எஸ் பொப்பி இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 62 |
| | **மொத்தம்** | **1,091** |

<u>குணதிலக கென்ஸ்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>

கம்பனி மற்றும் பணிப்பாளர்களிற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனியும் பணிப்பாளர்களும் கொடுக்கப்பட்ட முகவரிகளில் காணப்படாதமை காரணமாக கட்டளைகளை வழங்க முடியாதிருந்தது.

<u>ஆர்டிஎம்டி ரெக்ஸ்ரைல் (பிறைவேட்) லிமிட்டட்</u>

வசதியானது தற்போது மீளப்பட்டியலிடப்பட்டு வாடிக்கையாளர் மீள்கொடுப்பனவை ஆரம்பித்துள்ளார். நாளதுவரை நிலுவை எதுவும் காணப்படவில்லை.

<u>வோக்கர் சன்ஸ் & கம். எஞ்சினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>

ரூபா 100 மில்லியன் மேலதிகப்பற்று வசதி வழங்கப்பட்ட செயற்திட்டமொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.6 மில்லியன் தொகையை கம்பனி பெறவேண்டியிருந்தது. கம்பனியானது மிகுதி கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு அவர்களது சேவைநாடுநருடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்றது.

<u>சீ ஜே குறூஸ்</u>

மோசடியான கொடுக்கல் வாங்கல் காரணமாக இம் மேலதிகப்பற்று உருவாக்கப்பட்டிருந்தது. உள்ளக புலனாய்வு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு ஈடுபட்ட பதவியணி உறுப்பினர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

<u>எஸ் எஸ் குறூஸ்</u>

மோசடியான கொடுக்கல் வாங்கல் காரணமாக இம் மேலதிகப்பற்று உருவாக்கப்பட்டிருந்தது. உள்ளக புலனாய்வு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு ஈடுபட்ட பதவியணி உறுப்பினர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன

| | | | |
|---|---|---|---|
| | | <u>எல் எச் பியசேன & கம். (பிறைவேட்) லிமிட்டட்</u><br>வங்கியுடனான பல கலந்துரையாடல்களின் பின்னர் கம்பனி மற்றும் அதன் பணிப்பாளர்கள் அவர்களது இரண்டு ஆதனங்களை விற்பதன் மூலம் ஆகக் குறைந்தது ரூபா 300 மில்லியனை வைப்புச் செய்வதற்கு இணங்கியிருந்தன. எனினும் இது நாளதுவரை இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வங்கியானது பல அறவீட்டுத் திட்டங்களை முன்மொழிந்திருந்த போதிலும் பணிப்பாளர்கள் இறுதியாக சேவையாற்றுவதற்கான அவர்களது இயலாமையையும் எந்தவொரு விருப்பத்தையும் தெரிவித்தனர்.<br><br>குழுவின் மொத்த கடன் பொதி 2020 திசெம்பர் தொடக்கம் மறுமலர்ச்சி நடவடிக்கைகளை எடுப்பதற்காக ''வர்த்தக மறுமலர்ச்சி பிரிவிற்கு'' மாற்றப்பட்டிருந்தது.<br><br><u>சண் டிரவ & ரூர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u><br>சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு சட்ட பிரிவிற்கு கிடைக்கக்கூடிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.<br><br><u>எம் எஸ் பொப்பி இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u><br>வாடிக்கையாளர் தலைமறைவாக உள்ளார். சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கும் பொருட்டு சனாதிபதி ஆலோசகருடன் மேலதிக சட்ட ஆலோசனை நடைபெறுகின்றது. | |
| **46/2010 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின்** 7.5 ஆம் பிரிவு | 18 கரட்டிற்கு குறைவான தங்கநகை ஏற்றுக்கொள்ளப்படக்கூடாத போதிலும் கிளைப் பரீட்சிப்பின் போது 18 கரட்டை விடக் குறைவாகவுள்ள தங்கநகைகளை வங்கி ஏற்றுக்கொண்டிருந்த 08 சந்தர்ப்பங்கள் மருதானை கிளையிலும் 01 சந்தர்ப்பம் மினுவாங்கொட கிளையிலும் அவதானிக்கப்பட்டன. | <u>மருதானை கிளை</u><br>ஒரு மாதத்தினுள் தங்கநகையை மீட்டெடுக்குமாறு கடன்பெற்றவரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 18 கரட்டை விடக் குறைவான தங்கநகையை ஏற்றுக்கொள்ள வேண்டாமென உரிய பதவியணியினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | <u>மினுவாங்கொட கிளை</u> சீர்செய்யப்பட்டள்ளது. (வாடிக்கையாளரால் தங்கநகை மீட்டெடுக்கப்பட்டுள்ளது) 18 கரட்டை விடக் குறைவான தங்கநகையை ஏற்றுக்கொள்ள வேண்டாமென பதவியணி உறுப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். | |
| 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய **பிஈடி 03/2016 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின்** (2) ஆம் பந்தி | அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் ஊழியர்கள் உள்ளடங்கிய அரசாங்க உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி ஐஆர்டி இன் உரிய பிரமாணங்களின் பிரகாரம் வரி விதிக்கத்தக்க ஊழியர் வருமானங்களிலிருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும் வங்கிக்கும் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கையானது ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பு ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்படாமல் வங்கியால் செலுத்தப்படுவதற்கு பணிக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஊழியர்களின் வருமானங்களிலிருந்து கழிக்கப்படாமல் ஊழியர்களின் சார்பில் உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 681,789,671 தொகையை வங்கி செலுத்தியிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு வங்கிக்கும் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு வங்கியானது தொழில்தருநராக ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்காமல் தீர்ப்பனவு செய்கின்றது. | 03/2016 ஆம் இலக்க பிஈடி சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

**இலங்கை வங்கி ஊடாக மட்டக்களப்பு கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் இணைந்த நிறுவனங்களிற்கான நிதியனுப்பல் பெறுவனவு**

| | | | |
|---|---|---|---|
| **2017 இன் 12 ஆம் இலக்க வெளிநாட்டு நாணயமாற்று அதிகாரச்சட்டம்/ 1953 இன் 24 ஆம் இலக்க பண பரிமாற்றல் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டம்** | அந்நியசெலாவணி கொள்வனவு மற்றும் விற்பனையானது படிவம் I மற்றும் படிவம் II இனை பயன்படுத்தி மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட வேண்டும். எனினும் கொள்ளுப்பிட்டி மற்றும் காத்தான்குடி கிளைகளால் பேணப்பட்ட 04 கணக்குகளிற்குரிய ரூபா 504,710,570 பெறுமதியான உள்வந்த பணவனுப்பல்களை சீபீஎஸ்எல் இற்கு வங்கி அறிக்கையிட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | பொதுவாக ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட அனைத்து உள்வந்த பணவனுப்பல்களும் வங்கியால் இலங்கை மத்திய வங்கிக்கு ஒவ்வொரு பதினைந்து நாட்களிற்கு ஒருமுறை அறிக்கையிடப்படுகின்றன.<br><br>அதன் பிரகாரம் அவதானிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த அனைத்து பணவனுப்பல்களும் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தன.<br><br>மேலும் நாணயம் மாற்றப்படும் நேரத்தில் படிவம் II இன் கீழ் உள்வந்த பணவனுப்பல்கள் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும் தரவுகள் மத்திய வங்கியின் Forex Net முறைமைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.<br><br>தற்போது சீபீஎஸ்எல் ஆல் Forex net முறைமை | உரிய அதிகாரச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | இடைநிறுத்தப்பட்டுள்ளதால் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட கூற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நிலைமை ஒன்றில் வங்கி காணப்படவில்லை.<br><br>மேலும் வங்கி தற்போது சீபீஎஸ்எல் இன் புதிய முறைமையின் கீழ் படிவம் II இனை பயன்படுத்தி அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் தரவு சேமிப்புக்களை (backups) பேணுவதற்கான பொறிமுறையொன்றை ஸ்தாபித்திருந்தது.<br><br>தற்போது படிவம் 1/ படிவம் 2 ஊடாக அந்நியசெலாவணி கொள்வனவு மற்றும் விற்பனை கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு வங்கியில் முறைமையொன்று உள்ளது. | |
| **8.3 ஆம் பிரிவு** | அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்கள் தொடர்பாக கேவைசீ படிவத்தில் குறிப்பிடப்படும் நிதி மற்றும் செல்வத்தின் வளமூலங்கள் அல்லது நிதிகளின் நன்மையளிக்கும் உரிமைத்தவம் என்பன இனங்காணப்பட வேண்டும். எனினும் இது நிதி வளமூலம் மற்றும் செல்வ வளமூலம் என்பவற்றின் கீழ் ''ஏனையவை'' ஆக குறிப்பிடப்பட்டு வெளிநாட்டு பணவனுப்பலாக குறித்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால் அங்கே குறித்த வெளிநாட்டு முதலீட்டாளர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சர்வதேச வங்கிகள் ஊடாக பெறப்பட்ட பணம் சட்டரீதியான வளமூலங்களிலிருந்து பெறப்பட்டவையாக நியாயமாக கருதப்பட முடியும். அத்துடன் பீஒசீ ஆல் மீண்டும் நிதி/செல்வத்தின் வளமூலங்களை கண்டறிவதற்கான தேவைப்பாடு காணப்படவில்லை. உள்வந்த பணவனுப்பல்கள் ஊடாக பெறப்பட்ட பணம் வங்கிக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் வங்கியால் சரியாக உரிய பயனாளியின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் நிதிகளின் நோக்கம்/ பயன்பாடு வங்கியால் பொருத்தமானவாறு இனங்காணப்பட்டிருந்தது. | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் PEPs இன் நிதி வளமூலங்கள் தெளிவாக இனங்காணப்பட வேண்டும். |
| **12.1 ஆம் பிரிவு** | வாடிக்கையாளர் ஆபத்து சுயவிபரத்தை (customer risk profile) அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான உரிய அக்கறைக்கான ஆகக் குறைந்த தடவை தேவைப்பாடு (Minimum frequency requirement for ongoing due diligence) அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்களிற்காக ஒவ்வொரு 06 மாதங்களினுள் காணப்படுகின்றது. | உரிய கிளைகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் மீளாய்வு செய்திருந்ததை சரிபார்ப்பதற்கு போதுமான ஆவணச்சான்றுகள் காணப்படவில்லை.<br><br>தொடர்ச்சியான உரிய அக்கறையாக கிளைகளால் பின்வரும் படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன. | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் கொள்ளுப்பிட்டி கிளையால் ஒவ்வொரு 06 மாத காலப்பகுதியினுள் பிஈபி கணக்குகளிற்காக தொடர்ச்சியான உரிய அக்கறை மேற்கொள்ளப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. | • வாடிக்கையாளர் கணக்குகளிற்கு உள்வரும் பணவனுப்பல்களை செலவு வைப்பதற்கு முன்னர் வாடிக்கையாளர்களை விசாரணை செய்தல்.<br><br>• பண மோசடி கொடுக்கல்வாங்கல்களை எதிர்த்து தடுப்பதற்காக இலங்கை வங்கியால் பயன்படுத்தப்பட்ட AMLOCK முறைமை மூலம் இனங்காணப்பட்ட வழமைக்கு மாறான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக உரிய கிளைகளின் உத்தியோகத்தர்களால் வாடிக்கையாளர்களிடம் விசாரணை செய்யப்படுதல்.<br><br>2019 மார்ச்சிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஏஎம்எல் மற்றும் சீஎவ்ரீ நோக்கங்களிற்காக "Clari5" முறைமையை இலங்கை வங்கி பயன்படுத்துகின்றது.<br><br>அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்கள் மற்றும் உயர் ஆபத்து வாடிக்கையாளர்களுடன் தானாகவே வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தொடர்ச்சியான உரிய அக்கறையை மேற்கொள்வதற்கு இம் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. | |
| **4.3 ஆம் பிரிவு** | மூன்றாம் தரப்பு வாடிக்கையாளரால் தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ செய்யப்பட்ட ரூபா இரண்டு இலட்சத்தை (200,000) அல்லது எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் அதற்கு சமமான தொகையை விஞ்சிய அனைத்து காசு வைப்புக்களும் மூன்றாம் தரப்பு வாடிக்கையாளரின் பெயர், முகவரி, செல்லுபடியாகும் அடையாள ஆவணத்தின் அடையாள இலக்கம், நோக்கம் மற்றும் கையொப்ப பதிவொன்றை கொண்டிருக்க வேண்டிய போதிலும் ரூபா 60,980,000 தொகை மேற்குறிப்பிட்ட குறித்த தகவல்களை சுட்டிக்காட்டாமல் மட்டக்களப்பு கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் கணக்கிற்கு நடைமுறை காசு வைப்பொன்றாக வைப்பிலிடப்பட்டிருந்தது. | 10 சந்தர்ப்பங்களில் 9 சந்தர்ப்பங்கள் காத்தான்குடி கிளையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br><br>நிறுவனத்தின் இரண்டு ஊழியர்களால் இவ் வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென கிளை முகாமையாளர் உறுதிப்படுத்தியிருந்ததுடன் அவ் இரண்டு நபர்களும் வாடிக்கையாளர்களின் பிரதிநிதிகளாக நாளாந்த வங்கிச் செயற்பாடுகளிற்காக ஒழுங்காக கிளைக்கு வந்திருந்தனர்.<br><br>மேலும் அவ் ஊழியர்கள் நிறுவனத்தில் வேலை செய்கின்றனர் என முகாமையாளரிற்கு நன்றாக தெரிந்திருந்ததால் அவ் வைப்புக்கள் மூன்றாம் நபரொருவரால் | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்கும் பொருட்டு ரூபா 200,000 ஐ விஞ்சிய வைப்புக்களை மேற்கொள்ளும் போது உரிய தகவல்கள் பதிவுசெய்யப்படுவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களாக கருதப்பட்டிருக்கவில்லை.<br><br>ரூபா 500,000 தொகையான மிகுதி காசு வைப்பு பத்தரமுல்லை கிளை ஊடாக வைப்பிலிடப்பட்டிருந்தது. | |
| **3.3.14 ஆம் பிரிவு** | ஒரு வாடிக்கையாளரால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகள் திறக்கப்படும் போது அனைத்து கணக்குகளினதும் தொடர்ச்சியாக வாடிக்கையாளர் உரிய அக்கறையை ஏற்படுத்தும் பொருட்டு அத்தகைய கணக்குகள் திறக்கப்பட்டதற்காக குறித்துரைக்கப்பட்ட நோக்கம் பதிவுசெய்யப்பட வேண்டும்.<br><br>எனினும் கொள்ளுப்பிட்டி கிளை மற்றும் வெலிகந்த கிளையிலுள்ள வாடிக்கையாளரால் இரண்டு கணக்குகளை திறக்கும் போது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br><br>கொள்ளுப்பிட்டி கிளையில் கணக்கை திறக்கும் போது ‘‘உயர்கல்வி நிறுவனம்’’ ஆக குறித்துரைக்கப்பட்ட நோக்கம் குறிப்பிடப்பட்டிருந்த அதே நேரம் ‘‘வணிகத்தின் தன்மை’’ தலைப்பின் கீழ் வெலிகந்த கிளையில் கணக்கை திறக்கும் போது ‘‘கல்வி’’ ஆக இது குறிப்பிடப்பட்டிருந்தது. | மட்டக்களப்பு கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட் கொள்ளுப்பிட்டி கிளையில் இரண்டு கணக்குகளை திறந்திருந்தது. அவ் இரண்டு கணக்குகளில் கணக்கு இல. 78495137 வணிக நோக்கங்களிற்காக இலங்கை ரூபா நாணயத்தில் திறக்கப்பட்டிருந்தது.<br><br>ஐ.அ.டொலர் நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கணக்காக காணப்பட்ட கொள்ளுப்பிட்டி கிளையின் கணக்கு இல. 79387634 2016 யூன் 30 இல் திறக்கப்பட்டிருந்ததுடன் இக் கணக்கின் ஊடாக கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>இதற்கு மேலதிகமாக இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்ட நடைமுறைக் கணக்காக உள்ள வெலிகந்த பிஓசீயில் உள்ள கணக்கு இல. 82603832 மட்டக்களப்பு கம்பஸில் நிர்மாணங்களில் வேலைக்கு ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு நோக்கங்களிற்காக திறக்கப்பட்டிருந்தது.<br><br>நிர்மாண வேலைத்தளத்திற்கு அருகிலுள்ள கிளையாக வெலிகந்த கிளை காணப்பட்டதால் அவர்கள் இதனை தெரிவுசெய்திருந்தனர். | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| **3.1.1 ஆம் பிரிவு** | எந்தவொரு அநாமதேய கணக்கையும் (anonymous account) ஏதாவது தவறான பெயரிலான கணக்கிலோ அல்லது ஒரு கற்பனையான நபரின் பெயரிலோ அல்லது எண்ணால் மாத்திரம் அடையாளம் காணப்படுகின்ற எந்தவொரு கணக்கிலோ திறப்பதற்கு, செயற்படுத்துவதற்கு அல்லது பேணுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வணிக பதிவிற்கான ஆவணச்சான்றெதுவும் காணப்படவில்லை என்றாலும் கணக்கு இல. 74791337 கொண்ட ‘‘மாலிக் அப்துல்லா பின் அப்துல்லா அஸிஸ் பல்கலைக்கழக | பீஓசீ காத்தான்குடி கிளையானது இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சிற்கும் ஹிரா அறக்கட்டளை நிறுவனத்திற்கும் இடையே 2013 யூன் 11 இல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை (எம்ஓயூ) அடிப்படையாகக் கொண்டு ‘‘மட்டக்களப்பு மலிக் அப்துல்லா பின் அப்துல் அஸிஸ் பல்கலைக்கழக கல்லூரி’’ எனும் | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

கல்லூரி'' என்ற பெயரின் கீழ் நடைமுறைக் கணக்கொன்று திறக்கப்பட்டுள்ளது.

பெயரில் கணக்கு இல. 74791337 இனை திறந்திருந்தது.

ஹிரா அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் நடைமுறைக் கணக்கை திறக்குமாறு முகாமையாளரிடம் கோரியிருந்தார்.

ஹிரா அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் மேற்படி எம்ஓயூ இன் பிரதியொன்றுடன் காத்தான்குடி கிளையில் ''மட்டக்களப்பு மலிக் அப்துல்லா பின் அப்துல் அஸிஸ் பல்கலைக்கழக கல்லூரி'' எனும் பெயரின் கீழ் நடைமுறைக் கணக்கொன்றை திறப்பதற்கு 2013 யூன் 19 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் காத்தான்குடி கிளை முகாமையாளரிடம் கோரியிருந்தார்.

கணக்கை திறக்கும் சமயத்தில் கிளை முகாமையாளர் வணிக பதிவு காணப்படாதமை தொடர்பாக விசாரணை செய்திருந்ததுடன் முன்மொழியப்பட்ட பல்கலைக்கழகம் ''மட்டக்களப்பு மலிக் அப்துல்லா பின் அப்துல் அஸிஸ் பல்கலைக்கழக கல்லூரி'' எனும் பெயரில் எதிர்பார்க்கப்படுகின்றது என வாடிக்கையாளர் அறிவித்திருந்ததுடன் கணக்கிற்காக அதே பெயரில் நடைமுறைக் கணக்கை திறக்குமாறு அறிவித்திருந்தார். மேலும் அச் சமயத்தில் அதே விடயம் புதினப்பத்திரிகை கட்டுரைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. அதே கட்டுரைகள் இணையத்தளத்தில் தற்போதும் வாசிக்கக்கூடியதாக உள்ளது. மேற்குறிப்பிட்டதை அடிப்படையாகக் கொண்டு ''மட்டக்களப்பு மலிக் அப்துல்லா பின் அப்துல் அஸிஸ் பல்கலைக்கழக கல்லூரி'' எனும் பெயரில் கணக்கு திறக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| **பின்னிணைப்பு IV** | பின்வரும் எச்சரிக்கை சமிக்ஞைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவை தொடர்பாக வங்கி எந்தவொரு கவனமும் செலுத்தியிருக்கவில்லை.<br><br>(அ) வணிக காரணமொன்று இல்லாமல் அடிக்கடி பெரிய பெறுமதியிலான கொடுக்கல்வாங்கல்களை காட்டுகின்ற கணக்கு<br><br>(ஆ) வாடிக்கையாளரது வணிகத்தின் அறிந்துகொள்ளப்பட்ட புரள்வுடன் ஒத்திருக்காத பெரிய மீதிகளை உருவாக்குகின்ற வாடிக்கையாளர் குறிப்பாக தொடர்ந்து இடமாற்றமுள்ள வெளிநாடொன்றில் உள்ள இடங்களில் காணப்படுதல்.<br><br>(இ) வணிக கணக்கு(கள்) வைப்புக்கள் அல்லது மீளப்பெறல்கள் முதன்மையாக உள்ள இடங்களில் காசோலைகளிலும் பார்க்க காசாக உள்ளதுடன் இது அத் தன்மையிலான வணிகத்தின் வழமையான செயற்பாடுகளுடன் ஒத்திருப்பதில்லை.<br><br>(ஒ) பெரும் எண்ணிக்கையிலான தனிநபர்கள் ஒரே கணக்கிற்கு வைப்புக்களை மேற்கொள்ளுதல்.<br><br>(கு) வணிகமொன்று அதன் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்கோ அல்லது நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கோ தயங்குதல்.<br><br>(ச) தொண்டு/ நிவாரண நிறுவனம் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களுடன் இணைக்கப்பட்டிருத்தல்.<br><br>(உஉ) ஒரு கொடுக்கல் வாங்கல் மற்றும் சிக்கலான கொடுக்கல் வாங்கலிற்கான பல்வேறு தரப்பினர்கள். | **பிரிவு (அ)**<br>பல்கலைக்கழகம் ஒன்றினை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் கணக்கு திறக்கப்பட்டிருந்தது. கணக்கின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக இந் நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன என அறிவித்திருந்தனர். அச்சமயம் கொடுக்கல்வாங்கல் அளவை நியாயப்படுத்தி முன்மொழியப்பட்ட காணியில் பெரியளவிலான கட்டிட நிர்மாணங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.<br><br>**பிரிவு (ஆ)**<br>கணக்கை திறக்கும் சமயத்தில் வெளிநாட்டு பணவனுப்பல்கள் மற்றும் பெறுமதி ஐ.அ.டொலர் 10,000 இனை விட அதிகமாக காணப்பட்டதால் நிதி வளமூலமான கேவைசீ இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் இக் கணக்கு குறித்துரைக்கப்பட்ட நோக்கமொன்றிற்காக திறக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் வாடிக்கையாளர் கணக்கை திறக்கும் சமயத்தில் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.<br><br>**பிரிவு (இ)**<br>இக் கணக்கு பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் திறக்கப்பட்டிருந்தது. அத்துடன் பணவனுப்பல் தன்மை வெளிநாட்டு பணவனுப்பல்களாக கணக்கை திறக்கும் சமயத்தில் வாடிக்கையாளரால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் வணிகக் கணக்கொன்றின் வழமையான செயற்பாடுகளிலிருந்து இது வேறுபடுகின்றது.<br><br>**பிரிவு (ஒ)**<br>கணக்கை திறக்கும் தன்மை காரணமாக இது உள்ளது.<br><br>**பிரிவு (கு)**<br>இக் கணக்கு குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக திறக்கப்பட்டிருந்ததுடன் கணக்கை திறக்கும் சமயத்தில் இதனை வாடிக்கையாளர் | உரிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளிப்படுத்தியிருந்தார். வாடிக்கையாளரின் நிதிக்கூற்றுக்களை வங்கி கோரியிருக்கவில்லை.<br><br>**பிரிவு (ச)**<br>வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் இது ஒரு தொண்டு/ நிவாரண நிறுவனமாக காணப்படவில்லை.<br><br>**பிரிவு (உஉ)**<br>கணக்கிற்கான பணவனுப்பல்கள் SWIFT ஊடாக பெறப்பட்டிருந்தன. ஆகையால் வங்கியால் கொடுக்கல் வாங்கல்கள் சிக்கலானதாக கருதப்பட்டிருக்கவில்லை. | |

**1.8 ஐரீ பொதுவான கட்டுப்பாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்வின் போது சேகரிக்கப்பட்ட பயன்படுத்துநர் பட்டியல்களில் போதுமானளவு பயன்படுத்துநர் கணக்கு விபரங் ளைவ ங்கி பேணியிருக்கவில்லை. பின்வரும் அட்டவணை போதியளவு பயன்படுத்துநர் கணக்கு விபரங்களை உள்ளடக்கியிருக்காத அத்தகைய போதாத விபரங்களை சுட்டிக்காட்டுகின்றது.<br><br>**தவறவிடப்பட்ட பிரிவு (Field)** — **பிரயோகங்கள்**<br>செயலிழந்த திகதி — Prime4, திறைசேரி, ஐசீபீஎஸ் | Prime4 இன் பயன்படுத்துநர் IDs செயலிழத்தலானது செயற்பாட்டு அடைவு ஊடாக கையாளப்படுகின்றதுடன் செயலிழந்த திகதி logs இல் காணப்படுகின்றது. இறுதி பயன்படுத்துநர் ID மாற்றத் திகதி திறைசேரியில் பதிவுசெய்யப்படுகின்றது. ICBS முறைமைகள் மற்றும் அதிலிருந்து செயலிழந்த திகதியிலிருந்து பெறப்பட முடியும். | போதியளவு பயன்படுத்துநர் கணக்கு விபரங்களை பேணுவதையும் கணக்காய்வு நோக்கங்களிற்காக விபரங்கள் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்துதல். |
| (ii) | விலகியிருந்த 32 பயன்படுத்துநர் கணக்குகள் செயலிழக்கச் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2020 சனவரி 20 இல் கணக்காய்வாளரின் மீளாய்வின் போது குத்தகை முறைமையில் அவர்களது விலகல் திகதிகளின் பின்னரும் செயற்பாட்டில் காணப்படுகின்றன. | இரகசியக்குறியீடுகள் ஏற்கனவே செயலிழந்துள்ளன. பின்னிணைப்பில் குறிப்பிட்டவாறு பயன்படுத்துநர் கணக்குகளை செயலிழக்க செய்வதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன. | கால அடிப்படையொன்றில் குத்தகை முறைமையில் விலகிய ஊழியர்களின் பயன்படுத்துநர் கணக்குகளை செயலிழக்க செய்வதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

(iii) நிதிக் காலப்பகுதியின் போது உரிய முறைமைகளிற்கு பயன்படுத்துநர்கள் உள்நுழைந்திருக்காததால் 2020 சனவரி 20 இல் கணக்காய்வாளரின் மீளாய்வு சமயத்தில் Finacle திறைசேரி, எச்சீஎம், குத்தகை மற்றும் ஐசீபீஎஸ் முறைமைகளில் முறையே 13, 18, 40 மற்றும் 27 பயன்படுத்தப்படாத பயன்படுத்துநர் கணக்குகள் காணப்பட்டன.

**Finacle திறைசேரி**

குறிப்பிடப்பட்ட இரண்டு பயன்படுத்துநர்களையும் நாங்கள் ஏற்கனவே செயலிழக்கச் செய்துள்ளதுடன் அனைத்து பயன்படுத்துநர்களும் தற்போது Finacle திறைசேரி முறைமையில் ''செயற்படு'' நிலையில் உள்ளமையை உறுதிப்படுத்துகின்றோம்.

**குத்தகை முறைமை**

41 ஊழியர்களில் 33 ஊழியர்கள் தொழிலிலிருந்து விலகியிருக்கவில்லை.

2 ஊழியர்கள் மாத்திரம் விலகியிருந்ததுடன் 6 ஊழியர்கள் வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தனர்.

பதவி விலகிய மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்களிற்காக செயற்படு நிலையிலிருந்து செயலிழக்க செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

எனினும் பணியாற்றும் ஊழியர்களிற்கான முறைமை இரகசியக்குறியீடு செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தது.

**ஐசீபீஎஸ் முறைமை**

அனைவரும் ஐசீபீஎஸ் முறைமையின் செயற்படு பயன்படுத்துநர்களாக உள்ளதன் காரணமாக பயன்படுத்துநர் கணக்குகள் நீக்கப்பட முடியாதிருந்தன.

**எச்சீஎம்**

இரகசியக்குறியீடுகள் ஏற்கனவே செயலிழக்கப்பட்டிருந்தன.

வெவ்வேறு முறைமைகளில் காணப்படுகின்ற பயன்படுத்தப்படாத பயன்படுத்துநர் கணக்குகளை செயலிழக்கச் செய்வதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சியான விசாரணைகள் காரணமாக எச்சீளம் சுயவிபர நிலை மாற்றப்பட முடியாதிருந்தது.

(iv) கீழேயுள்ள முறைமைகளின் பிரயோக மட்ட பாதுகாப்பு உள்ளமைவுகளிற்காக போதுமானளவு இரகசியக்குறியீட்டு parameters வரையறுக்கப்பட்டிருக்காததுடன் கீழுள்ள அட்டவணையில் குறைபாடுகள் சித்தரிக்கப்படும்.

| இரகசிய குறியீட்டு Parameter | பிரயோகம் | பிரயோகிக்கப்பட்ட அமைப்பு | வழிகாட்டல் |
|---|---|---|---|
| ஆகக் குறைந்த இரகசியக் குறியீட்டு நீளம் | எச்சீளம் | 6 எழுத்து | 8 எழுத்து அல்லது மேற்பட்டது |
| | குத்தகை | 6 எழுத்து | |
| கட்டாய இரகசியக் குறியீட்டு மாற்றங்களின் தடவை* | எச்சீளம் | 90 நாட்கள் | 90 நாட்கள் - 4 இரகசியக் குறியீடுகள் |
| இரகசியக் குறியீட்டை மீண்டும் பயன்படுத்துவதற்கு முன்பு பயன்படுத்தப்பட வேண்டிய இரகசியக் குறியீடுகளின் எண்ணிக்கை* | எச்சீளம் | 0 இரகசியக் குறியீடுகள் | |
| விளைவற்ற அமர்வு வெளியேற்ற நேரம் | ஐசீபீஎஸ் | 30 நிமிடங்கள் | 15 நிமிடங்கள் அல்லது குறைவானது |
| | திறைசேரி | 30 நிமிடங்கள் | |

*ஒரே இரகசியக் குறியீட்டை ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு ஒன்றுடனொன்று இணைந்து இவ் இரண்டு parameters உருவாக்கப்பட வேண்டும்.

ஆகக் குறைந்த இரகசியக்குறியீட்டு நீளம், காலாவதியாகும் தடவை மற்றும் பயனற்ற அமர்வு வெளியேறல் காலத்திற்கு இணங்க முறைமை parameters மாற்றப்பட முடியும்.

பரிந்துரைக்கப்பட்ட உள்ளமைவுகளின் பிரகாரம் முன்னர் பயன்படுத்தப்பட்ட இரகசியக்குறியீடுகளை பரீட்சிக்கும் சாத்தியத்தன்மையை வங்கி ஆராய்கின்றது.

பிரயோக நிலை பாதுகாப்பு உள்ளமைவுகளிற்கு போதுமானளவு இரகசியக்குறியீட்டு parameters வரையறுக்கப்பட வேண்டும்.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 23 பில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 21 பில்லியனாக காணப்பட்டதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2 பில்லியன் தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. 2018 ஏப்ரல் 01 இலிருந்து செயற்படும் வகையில் இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளிடமிருந்து (எஸ்எல்டிபீ) ஈட்டப்பட்ட வட்டி வருமானம் மீது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட விலக்களிப்பு காரணமாக வருமான வரி செலவினம் குறைந்தமை முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக உள்ளது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

2.2.1 மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டு காலப்பகுதியின் போது வங்கியின் நிதி விளைவுகளை பின்வரும் அட்டவணை பொழிப்பாக தருகின்றது.

| ஆண்டு | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் (ரூபா. மில்லியன்) | 220,477 | 195,394 | 171,344 | 134,685 | 112,745 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பு/ குறைவு % | 13% | 14% | 27% | 19% | |
| வட்டி செலவினம் (ரூபா. மில்லியன்) | 145,331 | 129,836 | 112,988 | 80,728 | 66,419 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பு/ குறைவு % | 12% | 15% | 40% | 22% | |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா. மில்லியன்) | 29,685 | 33,416 | 30,343 | 31,189 | 25,279 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பு/ குறைவு % | -11% | 10% | -3% | 23% | |

2.2.2 முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு சதவீத அதிகரிப்பு அல்லது குறைவுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | முரண் தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா'000) | முரண் % | முரணிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 25,083,204 | 13 | காலக் கடன்கள், மேலதிகப்பற்று மற்றும் தனிப்பட்ட கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் பிரதானமாக 17 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. |
| வட்டி செலவினம் | 15,494,700 | 12 | வைப்பு அடிப்படை 2018 ஆம் ஆண்டில் 1.8 ரில்லியனிலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 2 ரில்லியன் வரை அதிகரித்து 13 சதவீத வளர்ச்சி விகிதத்தை காட்டுகின்றது. |
| கடன் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டக்கழிவு அறவீடுகள் | 3,556,764 | 24 | முழுத் தொழில்துறையிலும் இது போன்ற நிலைமையை பின்பற்றுவதன் மூலம் செயற்பாடற்ற கடன்கள் 1.17 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. |
| வருமான வரி | (5,826,233) | (47) | 2018 ஏப்ரல் 01 இலிருந்து செயற்படும் வகையில் இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளிடமிருந்து (எஸ்எல்டிபீ) ஈட்டப்பட்ட வட்டி வருமானம் மீது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. |
| ஏனைய பொறுப்புக்கள் | 14,255,258 | 72 | 2019 ஆம் ஆண்டின் உண்மையான மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மீதான தேறிய ஊழியர் நலன் பொறுப்பு அதிகரித்திருந்தது. |

2.3 **விகிதப் பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | துறை விகிதம் * | வங்கி 2019 | வங்கி 2018 |
|---|---|---|---|
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.6 | 16.8 | 17.3 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.0 | 1.3 | 1.6 |
| வட்டி எல்லை | 3.6 | 3.2 | 3.1 |
| **சொத்து தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 4.6 | 4.8 | 3.6 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு 1 மூலதனம் (ஆகக் குறைந்தது 10%) | 13.0 | 11.16 | 10.3 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 14%) | 16.6 | 15.58 | 14.58 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்து விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 20%) | 27.8 | 24.6 | 24.5 |
| திரவ மேவுகை விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 100%) | | 125.6 | 115.0 |

* துறை விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் பிரசுரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் புலனாய்வுக் கிளை நிதி மற்றும் நிதியற்ற பெறுமதிகள் இரண்டிலும் ஈடுபட்டு 2020 ஆம் ஆண்டின் போது 24 இனங்காணப்பட்ட மோசடியான வழக்குகள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட 40 மோசடியான வழக்குகள் தொடர்பாக புலனாய்வுகளை பூர்த்தி செய்திருந்தது. மோசடியான வழக்குகள் இவ் அறிக்கைக்கான பின்னிணைப்பு 01 இல் வழங்கப்பட்டுள்ளன. | இணங்கப்பட்டுள்ளது. | மோசடிகளை தவிர்க்கும் பொருட்டு வங்கியின் உள்ளகக் கட்டப்பாடுகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தலைமை அலுவலக கட்டிடத்தை வாடகைக்கு விடுதல் தொடர்பாக வங்கிக்கும் புரொப்பட்டி டெவலெப்மென்ட் பிஎல்சீ இற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கை 2019 யூன் 30 இல் காலாவதியாகியிருந்தது. வாடகை குறைப்பு தொடர்பாக பிடிஎல் உடன் பேச்சுவார்த்தை செயன்முறை செயன்முன்னேற்றத்தில் உள்ளதன் காரணமாக புதிய உடன்படிக்கை இரண்டு தரப்பினர்களிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. முன்னைய உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு வாடகை செலுத்தப்பட்டிருந்தது. | வங்கியின் பணிப்பாளர் சபை 2019 யூலை 01 தொடக்கம் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கான வாடகைக்கு மாத்திமே அதன் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. மேலும் சபையானது 2020 ஏப்ரல் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொண்டு பிடிஎல் இடம் வாடகை குறைப்பை கோருமாறு அறிவுறுத்தியிருந்தது. உடன்படிக்கை காலப்பகுதி 3 ஆண்டுகளாக காணப்படுகின்றதால் மிகுதி காலப்பகுதிக்கு பிரயோகிக்கக்கூடிய வாடகை இறுதியாக்கப்பட வேண்டும். பிடிஎல் உடனான பேச்சுவார்த்தை செயன்முறை செயன்முன்னேற்றத்தில் உள்ளது. 2019 யூலை 01 இலிருந்து 3 ஆண்டு மொத்தக் காலப்பகுதிக்கான வாடகை இறுதியாக்கப்பட்டதன் பின்னர் உடன்படிக்கை நிறைவேற்றப்படும். | வாடகை பெறுமதி இறுதியாக்கல் செயன்முறை மற்றும் வங்கிக்கும் பிடிஎல் இற்கும் இடையேயான புதிய உடன்படிக்கையை கைச்சாத்திடுதல் என்பவற்றை துரிதப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (ii) | லங்கா சதொச லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 45 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 11.25 மில்லியன் கடன்கள் தொடர்பாக வழங்கப்பட்ட திறைசேரிப் பிணைகள் முறையே 2015 ஏப்ரல் 30 மற்றும் 2015 யூலை 31 இல் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2020 ஒக்தோபர் 13 வரை புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | லங்கா சதொச லிமிட்டட்டின் திறைசேரிப் பிணைகள் 2015.04.30 மற்றும் 2015.07.31 இல் காலாவதியாகியிருந்ததுடன் உரிமைக் கோரிக்கைகள் 2015.04.30 மற்றும் 2015.07.27 இல் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இறக்குமதி கடன்களிற்காக அடுத்த வருடாந்த பாதீடு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கடன் சேவைக்கான (2019.12.30 வரையான மூலதனம் மற்றும் வட்டி மாத்திரம்) வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டிற்காக 2020.02.26 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. (வங்கியானது 2020.01.01 தொடக்கம் மீளப்பட்டியலிடப்பட்ட திகதி வரை வட்டியை விட்டுவிட வேண்டியிருந்தது.) | திறைசேரிப் பிணைகளை பெற்றுக்கொள்ளும் செயன்முறை விரைவுபடுத்தப்படுதல். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மார்ச் 04 இல் சபைத் தீர்மானத்தை பின்பற்றி 2020 ஆம் ஆண்டின் போது முன்கூட்டிய ஓய்வூதிய நலன்களாக முன்னாள் பொது முகாமையாளரிற்கு ரூபா 32,039,733 கூட்டுத்தொகையான சர்ச்சைத் தன்மையான கொடுப்பனவொன்றை வங்கி மேற்கொண்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. | - | தவறான முன்னுதாரணத்தை வழங்குகின்ற சர்ச்சைத் தன்மையான கொடுப்பனவுகளை தவிர்த்தல். |

| கொடுப்பனவு வகைகள் | தொகை (ரூபா) |
|---|---|
| உபசரணைப் படிகள் | 7,564,516 |
| மிகையூதியங்கள் | 9,007,169 |
| 2020 ஏப்ரலில் மிகையூதிய முற்பணக் கொடுப்பனவு | 411,586 |
| ஓய்வூதிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு | 5,814,877 |
| சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தின் 15% வேறுபாடு | 7,049,516 |
| நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு | 1,453,719 |
| வாகன நலனின் குறைவான அறவீடு | 656,250 |
| வாகன பராமரிப்புக் கிரயம் | 82,100 |
| **மொத்தம்** | **32,039,733** |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட பெறுகைக் கைநூலின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 ஆம் நிதியாண்டிற்காக வங்கியால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு எதிராக பெற்றுக்கொள்ளப்பட்ட செயன்முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்த போது குறிப்பிடத்தக்களவு விலகல்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன. | பின்வரும் காரணங்களினால் பாதிடப்பட்ட பெறுமதியை விட உள்ளபடியான செலவினம் குறைவாக காணப்பட்டது. அவையாவன;<br>(i) சில ஐரீ பெறுகைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை.<br>(ii) அரசாங்க நிறுவனங்களிற்காக வாகனங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட | அனைத்து வெளியக காரணிகளையும் கருத்தில் கொண்டு மிகவும் அக்கறையுடன் பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் மதிப்பிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை நோக்கி திருப்திகரமான செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு தேவையான அனைத்து படிமுறைகளையும் எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகின்றது. |

| பெறுகை வகை | மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா)' மில்லியன் | உள்ளபடியானது (ரூபா)' மில்லியன் | மதிப்பீட்டின் % ஆக செயன் முன்னேற்றம் |
|---|---|---|---|
| வாகனம் | 959 | 299 | 31.18 |
| காணி | 1,500 | 770 | 51.33 |
| ஐரீ தொடர்பான உபகரணம் | 4,779.5 | 3420.5 | 71.57 |
| கிளை மாற்றம் | 1,500 | 347.2 | 23.15 |
| நிர்மாணம் | 4,315 | 3,035 | 70.34 |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டுப்பாடுகள் காரணமாக வாகனங்களின் பெறுகை இரத்துச் செய்யப்பட்டமை: 16 இருக்கை வாகனங்களில் 02 எண்ணிக்கையானவை, 16 எண்ணிக்கையான எஸ்யூவி வகை வாகனங்கள், 04 எண்ணிக்கையான காசு கரியர்கள், 60 எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்கள், 1 எண்ணிக்கையான Propaganda வாகனம். | |
| | (iii) | சுற்றாடல் காரணிகள் காரணமாக (2019 ஏப்ரலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், 2019 மே தொடக்கம் திசெம்பர் வரை கனமழை, 2019 நவம்பர் சனாதிபதி தேர்தல்) ஒப்பந்தங்களை பூர்த்தி செய்தல்/ ஆரம்பித்தலில் தாமதங்கள். | |
| | (iv) | பெறுகைக்கான முறைமை, desktop virtualization, தலைமை அலுவலக கட்டிடத்தின் காணி உட்கட்டமைப்பு போன்ற 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட சில ஐரீ பெறுகைகள் ஆரம்பிக்கப்படாமை. | |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டிற்கான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 11,310 ஊழியர்களாக உள்ளதுடன் அத்திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 8,503 நிரந்தர | தேவயான பதவியணியினரை மதிப்பீடு செய்த பின்னர் எச்ஆர்பிசீ இன் | வெற்றிடமாகவுள்ள பதவிநிலைகளிற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் |

பதவியணியினர் மற்றும் 1,555 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உள்ளடங்கிய 10,058 ஊழியர்களாவர். ஆகையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,252 பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

பரிந்துரையுடன் வங்கிக்கான புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சபை அங்கீகாரம் பெறப்படும்.

செய்வதற்கும் வங்கிச் செயற்பாடுகளின் சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான படிமுறைகளை எடுத்தல்.

(ii) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட 126 பதவியணி ஊழியர்களுடன் ஒப்பிடும் போது நாற்பத்து எட்டு (48) வெற்றிட பதவிகள் அவதானிக்கப்பட்டன. பின்வரும் பதவியணி வகைப்படுத்தல்களில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

| **பதவியணி வகை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| உதவி பொது முகாமையாளர் | 02 |
| வங்கியல்லாத பட்டயக் கணக்காளர்கள் | 07 |
| சிரேஷ்ட முகாமையாளர் | 04 |
| கிளை முகாமையாளர் | 09 |
| உதவி முகாமையாளர் | 05 |
| நிறைவேற்று உத்தியோகத்தர் | 04 |
| நிறைவேற்று கணக்காய்வு உத்தியோகத்தர் - வங்கியல்லாதவை | 08 |
| கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் | 02 |
| கனிஷ்ட கணக்காய்வு உத்தியோகத்தர் - வங்கியல்லாதவை | 01 |
| பதவியணி உதவியாளர் | 05 |
| கணக்காய்வு உதவியாளர் - வங்கியல்லாதவை | 01 |
| **மொத்தம்** | **48** |

புதிய பதவியுயர்வுகள் உதாரணமாக உதவி பொது முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர் போன்றவற்றின் மூலம் பதவியணியினரை ஒதுக்குவதறன் ஊடாக பெரும்பாலான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தன. அண்மையில் புலனாய்வுகளிற்கு பதவியணியினரை ஒதுக்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதன் பிரகாரம் 06 பதவியணியினர் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வெற்றிடமாகவுள்ள பதவிநிலைகளிற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான படிமுறைகளை எடுத்தல்.

பின்னிணைப்பு 01

| மோசடியின் தன்மை | 2020 ஆம் ஆண்டு | | 2019 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | வழக்குகளின் எண்ணிக்கை | நிதிப் பெறுமதி (ரூபா) | வழக்குகளின் எண்ணிக்கை | நிதிப் பெறுமதி (ரூபா) |
| பிஓஎஸ் கொடுக்கல்வாங்கல் மோசடி | 1 | 25,000 | 2 | 163,574 |
| ஏரீஎம் மீளப்பெறல் மோசடி | 5 | 869,494 | 5 | 392,529 |
| Just Pay ஊடாக மோசடியான நிதி கொடுக்கல் வாங்கல்கள் | 8 | 317,343 | - | - |
| வாடிக்கையாளர்களின் நிதிகளை அவர்களது இணக்கப்பாடின்றி கடன் வழங்குதல் மற்றும் மீளப்பெறுதல் | 1 | 14,500,000 | | |
| (மோசடியின் தன்மை: ஊழியரொருவரால் போலியான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள் மற்றும் நிதிகள் மீளப்பெறல் தொடர்பான முறைகேடுகள்) | | | | |
| பிற்திகதியிடப்பட்ட காசோலைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான முறைகேடுகள் | 2 | 7,147,000 | 1 | 13,360,000 |
| ஊழியரொருவரால் பௌதீக ரீதியாக காசின்றி காசோலைகளை காசாக்குவதன் மூலம் வங்கி நிதிகள் தவறாக பயன்படுத்தப்படுதல். | 1 | காணப்படவில்லை | - | - |
| போலி/ விளைவற்ற தங்கநகை | 1 | 32,000 | 1 | 764,000 |
| Skimmed அட்டை கொடுக்கல்வாங்கல்கள் | 1 | 3,100 | 3 | 1,481,447 |
| ஊழியரொருவரால் தொழில் பெறும் நேரத்தில் போலியான தகைமை சமர்ப்பிக்கப்பட்டமை. | 2 | காணப்படவில்லை | | |
| வாடிக்கையாளர் கணக்கில் ஊழியர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மீளப்பெறல். | 1 | 15,000 | | |
| ஊழியர் ஒருவரால் வாடிக்கையாளர்களிடமிருந்து வெற்றுக் காசோலைகளை சேகரிப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட காசோலை மோசடி | | - | 1 | 484,000 |
| உத்தியோகத்தரின் இணக்கப்பாடின்றி உத்தியோகத்தரின் இரகசியக் குறியீட்டை இடுவதன் மூலம் முறைமையில் ஏரீஎம் அட்டை உருவாக்கப்பட்டு வாடிக்கையாளர்களின் வட்டிப் பணம் மோசடி செய்யப்படுதல். | | - | 1 | 14,053 |
| ஊழியரொருவரால் அவரின் பெயரின் கீழ் பௌதீக ரீதியாக காசின்றி முறைமையில் மோசடியாக எவ்டி உருவாக்கப்பட்டமை | | - | 1 | 8,115,000 |
| மோசடியான வசதிகளை உருவாக்குதல் | | - | 1 | காணப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| மற்றும் தங்கநகை அடகு வைத்தல் தொடர்பான முறைகேடுகள் | | | |
| ஊழியர் ஒருவரால் விண்ணப்பமொன்று மீது போலியான பதிவுகள். | - | 1 | காணப்படவில்லை |
| ஜீஎல் கணக்குகளிற்கு வரவு வைத்து ஊழியர் ஒருவரால் வங்கி நிதிகள் மோசடி செய்யப்பட்டமை. | - | 2 | 22,249,577 |
| ஊழியர் ஒருவரால் சூதாட்டத்திற்காக வங்கி நிதிகள் மோசடி செய்யப்பட்டமை. | - | 1 | 86,700 |
| மோசடியான மீதி உறுதிப்படுத்தல் | - | 4 | காணப்படவில்லை |
| மோசடியான காசு மீளப்பெறல் | - | 1 | 102,000 |
| மோசடியான காசோலை கொடுப்பனவு | - | 2 | 318,000 |
| மோசடியான நிதி மாற்றம் | - | 1 | $ 311,040 |
| இணையத்தள வங்கி வசதி ஊடாக மோசடியான நிதி மாற்றம் | - | 2 | 1,437,400 |
| முறைமை தவறு காரணமாக மோசடியான பிஓஎஸ் கொடுக்கல்வாங்கல்கள் | - | 1 | 19,590 |
| முறையற்ற மதுபான இருப்பு மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து பணம் மோடி செய்யப்படுதல். | - | 1 | 20,100 |
| வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் மீதான முறைகேடுகள் மற்றும் வரையறைகள் | - | 1 | காணப்படவில்லை |
| எஸ்எம்ஈ கடன் ஒன்றாக வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீதான முறைகேடுகள் | - | 1 | 131,000,000 |
| உறவினர்களிற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீதான முறைகேடுகள் | - | 2 | 15,000,000 |
| பிற்திகதியிடப்பட்ட காசோலைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட ஓடி வசதிகள் மீதான முறைகேடுகள் | - | 2 | 60,000,000 |